6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தம்) சட்டமுன்வடிவு, 2019

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தம்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தம்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.“

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

நண்பகல் 12–00

(ஆ) தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2019

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*